IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.No.160/2022

Deposition of Witness for P.W.13

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.குமரன் |
| FATHER NAME | - | திரு.வையாபுரி |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | கிராம நிர்வாக அலுவலர், முப்பதுவெட்டி கிராமம் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.10.2025.

1, 3, 5 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை-தொடர்ச்சி</u>

கீழ்முட்டுகூர் எல்.என் கிராமத்தில் வசித்து வந்த கிருஷ்ணன் அவரது அண்ணன் தாமோதரன் இருவர் குடும்பத்திற்கும் சொத்து தகராறு இருந்ததாக கேள்விபட்டேன். 11.06.2020 அன்று பகல் 2.30 மணியளவில் லத்தேரி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் தாமோதரன், முருகன், காந்தி , பாஸ்கரன் இவர்கள் 4 பேரையும் கீழ்முட்டுகூர் மதுரா, எல்.என்.புரம் கூட்டு ரோடில் வைத்து கைது செய்ததாகவும் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற இருப்பதால் கிராம நிர்வாக அலுவலராகிய என்னையும், என்னுடன் இருந்த எனது உதவியாளர் பலராமன் அவர்களையும் சாட்சிகளாக இருக்க மேற்படி இடத்திற்கு வருமாறு என்னை அழைத்தார்கள். நான் உடனே சம்பந்தப்பட்ட இடத்திற்கு எனது உதவியாளருடன் 2.45 மணிக்கு போய் சேர்ந்தேன். அங்கு தாமோதரன், அவருடைய மகன்கள் முருகன், காந்தி, பாஸ்கரன் ஆகியோர் உடன்

காவலர்களும் உடன் இருந்தார்கள். எதிரி முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 2.45 மணிக்கு பெற்று 3.10 மணியளவில் TN-23-CK-0281 Bajaj Platina வாகனத்தை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். 1வது எதிரி முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.7. இருசக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.8. TN-23-CK-0281 Bajaj Platina வாகனத்தின் புகைப்படம் அ.த.சா.ஆ.9. அந்த வாகனம் சா.பொ.6. பிற்பகல் 3.15 மணியளவில் காந்தியின் ஒப்புதல் வாக்குமூலத்தை அதே இடத்தில் போலீசார் பெற்று 3.40 மணியளவில் TN-23-BD-2621 என்ற இருசக்கர வாகனத்தை மகசரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள்.. காந்தியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.10. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. கைப்பற்றுதல் மகசர் அ .த.சா.ஆ.11. TN-23-BD-2621 வாகனத்தின் புகைப்படம் அ.த.சா.ஆ.12. TN-23-BD-2621 வாகனம் சா.பொ.7. 3.45 மணியளவில் பாஸ்கரனுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்று பின்பு 4.10 மணியளவில் TN-23-BA-3040 ஸ்கோடா கார் வாகனத்தை மகசரில் கைப்பற்றினார்கள். பாஸ்கரனுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.13. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.14. TN-23-BA-3040 ஸ்கோடா கார் வாகனத்தின் புகைப்படம் அ.த.சா.ஆ.15. TN-23-BA-3040 வாகனம் சா.பொ.8. மாலை 4.15 மணியளவில் தாமோதரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த

வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.16. பின்பு 4 பேரையும் போலீசார் அழைத்துக் கொண்டு கீழ்முட்டுகூர் எல்.என்.புரம் கிராமத்தில் அமைந்துள்ள எதிரிகளுடைய வீடான 3/167 வீட்டிற்கு சென்று முதல் எதிரி முருகன் இரத்தக்கறை படிந்த ரீப்பர் மரக்கட்டை, மரக் கொம்பு மற்றும் இரத்தக்கறை படிந்த மூங்கில் கம்பு ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அதை போலீசார் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் நானும் , கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.17, ரீப்பர் மரக்கட்டை சா.பொ.9. மரக் கொம்பு சா.பொ.10. இரத்தக்கறை படிந்த மூங்கில் கம்பு சா.பொ.11. காந்தி இரத்தக்கறை படிந்த மரக்கொம்பு இரண்டை வீட்டிலிருந்து எடுத்து வந்து போலீசாரிடம் கொடுத்தார். போலீசார் அதனை மகசரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.18. மரக் கொம்பு 2 சா.பொ.12,13. பாஸ்கரன் இரத்தக்கறை படிந்த சிறிய உடைந்த நிலையில் உள்ள சிறிய உலக்கையை எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்தார். போலீசார் அதனை மகசரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.19. சிறிய உலக்கை சா.பொ.14. தாமோதரன் அவர்கள் இரத்தக்கறை படிந்த மரக் கொம்பு ஒன்றை வீட்டிலிருந்து எடுத்து வந்து போலீசாரிடம் கொடுத்தார். போலீசார் அதனை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.20. அந்த மரக்கொம்பு சா.பொ.15. போலீசார் எதிரிகளை வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள். கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,

உதவியாளரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் 24.09.2025 அன்று சாட்சியம் அளித்துள்ளேன். அப்போது முதல் விசாரணையில் நான் தேதி, மாதம், வருடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு 4.30 மணியளவில் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் போலீசார் எதிரிகளை விசாரித்தார்களா என்று நான் கவனிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன். நான் கே.வி.குப்பம் தாலுகா அலுவலகத்தில் எனது வேலை சம்பந்தமாக இருந்த போது லத்தேரி காவல் ஆய்வாளர் என்னை தொடர்பு கொண்டு கொலை வழக்கு சம்பந்தமாக 4 பேரை எல்.என்.புர,ம் கூட்டு ரோட்டில் கைது செய்துள்ளேன். அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருப்பதற்காக என்னையும், எனது கிராம உதவியாளர் பலராமன் அவர்களையும் அழைத்தார். கே.வி.குப்பம், தாலுகா அலுவலத்திற்கும் எல்.என்.புரம் கூட்டு ரோட்டிற்கும் சுமார் 3 கி.மீ. துாரம் இருக்கும். கிராம உதவியாளர் அப்போது கிராத நிர்வாக அலுவலகத்தில் இருந்தார். நான் தான் எனது கிராம உதவியாளரை கூப்பிட்டேன். நான் தாலுகா அலுவலகத்தில் இருந்து எனது நிர்வாக அலுவலகத்திற்கு வந்து கிராம உதவியாளரை அழைத்துக் கொண்டு போனேன். கிராம உதவியாளரை கூட்டி வருவதற்காக என்னுடைய கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றேன். என்னிடமும், கிராம உதவியாளரிடமும செல்போன் உள்ளது. போலீசார் எனக்கு செல்போன் மூலமாக தகவல் சொல்லி அழைத்தார்கள். கிராம உதவியாளர் எனக்கு கீழான நிலையில் உள்ளவர் தான். கிராம உதவியாளருக்கு வாகனம் இல்லாததால் நான் போய்

அழைத்துக் கொண்டு போனேன். நான் ஒவ்வொரு முறையும் சொல்கின்ற வேலைகளுக்கு நான் வண்டி எடுத்துக் கொண்டு போய் கிராம உதவியாளரை அழைத்துப் போவேன். நான் எல்.என்.புரம் கூட்டு ரோட்டிற்கு செல்லும் போது எதிரிகளும், அந்த வாகனமும் அங்கேயே இருந்தது. எதிரிகளை போலீசார் எப்போது, எங்கே, எப்படி கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தாலுகா அலுவலகத்தில் இருந்து என்னுடைய கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று பின்பு அங்கிருந்து எல்.என்.புரம் கூட்டு ரோடு வர மொத்தமாக 5 கி.மீ தூரம் இருக்கும். நான் கையெழுத்து செய்த கைப்பற்றுதல் மகசர்கள் மொத்தம் 7. நான் கைப்பற்றுதல் மகசரை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் நான் சொன்ன பொருட்கள் எங்கிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் வீட்டிலிருந்து கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளார்கள். கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றுதல் சான்று பொருட்கள் எந்த இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது என குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் 2, ஸ்கோடா கார் 1 எல்.என்.புரம் கூட்டு ரோட்டில் அதே இடத்தில் மகசரில் ஒன்றாக எழுதினார்கள் என்றால் சரி. வாகனங்களை 3 மகசரில் ஒன்றாக எழுதிய பிறகு என்னிடம் அதே இடத்தில் கையெழுத்து வாங்கினார்கள். 8 ஆயுதங்களையும் ஒரே வீட்டிலிருந்து கைப்பற்றினார்கள். எதிரிகள் 4 பேரும் ஒவ்வொருவராக வீட்டினுள் சென்று ஒவ்வொரு ஆயுதத்தை எடுத்து வந்தார்கள். எதிரிகள் எல்லா ஆயுதத்தையும் எடுத்து வந்த பிறகு அதற்கு சம்பந்தப்பட்ட மகசர்கள் ஒரே நேரத்தில் தயார் செய்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.9 முதல் 15 வரையான மரக்கட்டைகள், ரீப்பர் கட்டைகள், மரக்கொம்பு , உலக்கை எந்தெந்த

எதிரி எந்தெந்த சான்று பொருட்களை எடுத்து ஆஜர் செய்தார்கள் என்று தற்போது நினைவில்லை. 5 வருடம் ஆனதால் எனக்கு நினைவில்லை. முதல் விசாரணையில் நான் சம்பவம் நினைவில்லை என கூறிவிட்டு தற்போது முதல் விசாரணை தொடர்ச்சியில் எவ்வாறு வழக்கு சம்பவம் பற்றி நினைவோடு கூறுகிறேன் என்றால் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த வாக்குமூல நகலை என்னிடம் கொடுத்தார் அதைப் படித்துப் பார்த்து இப்போது சாட்சியம் அளிக்கிறேன். அதை படித்துப் பார்ப்பதற்கு முன்பாக நடந்த சம்பவங்களை நான் மறந்துவிட்டேன் என்றால் சரி. நான் சொல்வது போல் காவல் ஆய்வாளர் எதிரிகளை விசாரிக்கவில்லை என்றும் எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் எதிரிகள் எந்தவிதமான வழக்கு சொத்தையும் எங்கள் முன்னிலையில் ஆஜர் படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காவல் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க நான் அவர்கள் சொல்லி கொடுத்தது போல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.10.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore